வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணி பழனி

தேதி 15.2.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- செயற்கை நுண்ணறிவை உயர்கல்வியுடன் ஒருங்கிணைக்க மத்திய அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, தெரிவித்துள்ளார்.
- 3-ஆவது கட்ட காசி தமிழ் சங்க நிகழ்வினை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வாரணாசியில் இன்று மாலை தொடக்கி வைத்தார்.
- பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் 50 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியதன் மூலம் புதிய உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.
- புதுச்சேரியில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் 10-மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிபிஎஸ்இ பொது தேர்வு இன்று தொடங்கியது.

<u>*திரவுபதி-முர்மு*</u>

செயற்கை நுண்ணறிவை உயர்கல்வியுடன் ஒருங்கிணைக்க மத்திய அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, தெரிவித்துள்ளார். 2 நாள் பயணமாக ஜார்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சி சென்றுள்ள அவர், இன்று நடைபெற்ற பிர்லா தொழில் நுட்ப கல்விக் கழகத்தின் பவளவிழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அப்போது உரையாற்றிய அவர் செயற்கை நுண்ணறிவால் எதிர்காலத்தில் மிகப் பெரிய மாற்றங்கள்

ஏற்படும் என குறிப்பிட்டார். அறிவுசார் கட்டமைப்பில் பாரம்பரிய சமூகத்தினரின் பங்களிப்பை தொழில் முனைவோரும், படைப்பாற்றல் திறனாளர்களும் புறக்கணிக்க கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார். வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைவதில் இளைஞர்களின் பங்களிப்பு குறித்து எடுத்துரைத்தார். மகளிர் ஆளுமைக் குறித்து பெருமிதம் தெரிவித்த குடியரசு தலைவர் அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், கணினி துறைகளில் மகளிரின் அலப்பறிய பங்கை பாராட்டினார்.

<u>மோடி</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி பிரான்ஸ் மற்றும் அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு புதுடெல்லி திரும்பினார். இந்த பயணத்தின் போது இருநாட்டு தலைவர்களுடன் பிரதமர் நடத்திய பேச்சு வார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்பை சந்தித்து பிரதமர் திரு நரேந்திர மோடி 4 மணி நேரத்திற்கும் மேலாக பேச்சு வார்த்தை நடத்தியதாக வெளியுறவுத் துறையின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு வர்த்தகம், தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சு வார்த்தையின் போது விவாதிக்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை இருமடங்கிற்கும் கூடுதலாக அதிகரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக இந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*<u>காசி தமிழ் சங்கமம்</u>*

ஒரே பாரதம்-உன்னத பாரதம் இயக்கத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 3-ஆவது கட்ட காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்பதற்காக தமிழகத்திலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் அடங்கிய முதல் குழு வாரணாசி சென்றடைந்துள்ளது. இன்று காலை வாரணாசி

ரயில் நிலையத்தில் அவர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இன்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் காசி தமிழ் சங்கம நிகழ்வினை மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோருடன் இணைந்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், நூற்றாண்டு கால கலாச்சார உறவினை மேம்படுத்தும் வகையில் 3-ஆவது ஆண்டாக இந்த காசி தமிழ்சங்கமம் சிறப்பாக நடைபெற வழிவகை செய்த பிரதமருக்கு தமிழக மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

*பரிக் ஷா பே சர்ச்சா*

இளையோரின் வளர்ச்சியில் கல்வி மட்டுமல்லாமல் மனநலம் முக்கிய பங்காற்றுவதாக சத்குரு ஜக்கி வாசுதேவ் கூறி உள்ளார். பரிக் ஷா பே சர்ச்சா கலந்துரையாடலின் 5-ஆவது பகுதியாக மாணவர்களுக்கு மன ஆலோசனைகளை வழங்கிய அவர் விழிப்புடனும், எழுச்சியுடனும் தெளிவான சிந்தனையோடு முன்னேற்றப் பாதையில் மாணவர்கள் திறம்பட செல்ல முடியும் என நம்பிக்கை ஊட்டினார். மாணவர்கள், தங்கள் மனதை சமச்சீருடன் வைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கிய அவர் தேர்வுகளை கவனத்துடனும், விழிப்புடனும் எதிர்கொள்வதற்கான தொழில் நுட்ப அறிவுரைகளையும் வழங்கினார். மாணவர்கள் அறிவாற்றலை ஆக்கப்பூர்வமாக முன்னெடுத்து செல்ல வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடியின் வழிகாட்டு நெறிமுறைகளை அவர் அப்போது எடுத்துரைத்தார்.

***மீன்வளம்***

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் மீன் உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என மத்திய மீன்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதன்படி, 2013-14-ஆம் நிதியாண்டில் 95 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி 2023-24-ஆம் நிதியாண்டில் 1 லட்சத்து 24 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளதாக மீன்வளத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த 20 ஆண்டுகளில் இந்திய மீன்வளத் துறை மாபெரும் வளர்ச்சியுடன் கூடிய மாற்றத்தை சந்தித்து வருவதாகவும் சுட்டிக்காட்டி உள்ள அமைச்சகம் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் இதுவரை இல்லாத அளவாக மீன்வளத் துறைக்கு 2 ஆயிரத்து 703 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் 8 சதவிகித பங்களிப்புடன் 2-ஆவது மிகப் பெரிய மீன்உற்பத்தி நாடாக இந்தியா திகழ்வது குறிப்பிடத் தக்கது.

***வருமான வரி***

புதிய வருமான வரி சட்ட மசோதா குறித்து ஆராய 31 உறுப்பினர்கள் கொண்ட ஆய்வுக் குழுவை மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா ஏற்படுத்தி உள்ளார். பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு வைஜெயந்த் பாண்டா தலைமையிலான இக்குழு தனது அறிக்கையை 2-ஆவது கட்ட பட்ஜெட் கூட்டத் தொடரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். வருமானவரி திருத்தங்களுடனான இப்புதிய மசோதாவை கடந்த வியாழக்கிழமை மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார். இம்மசோதாவை தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப பரிந்துரைத்ததன் அடிப்படையில் மக்களவைத் தலைவர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

## <u>கும்பமேளா</u>

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் உலகின் மிகப் பெரிய ஆன்மிகத் திருவிழாவான மகா கும்பமேளா வரலாற்று சாதனைப் படைத்துள்ளது. இந்த மகா கும்பமேளாவில் 50 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியதன் மூலம் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது. உலக அளவில் ஒரு நிகழ்வில் 50 கோடிக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டது இதுவே முதல் முறை என குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மகா கும்பமேளாவில் கலந்து கொண்ட புதுச்சேரி மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பக்தர்கள் சிலர் கூறுகையில்.............

(வாய்ஸ்)

## <u>பிரஞ்ச் விழா</u>

புதுச்சேரி சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தோ-பிரஞ்ச் திருவிழாவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் நேற்று தொடக்கி வைத்தார். 3 நாட்கள் நடைபெற உள்ள இத்திருவிழாவின் 2-ஆம் நாளான இன்று கடற்கரை சாலை காந்தி திடல் மற்றும் பாரதி பூங்காவில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற உள்ளன. காந்தி திடலில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் பிரம்மாண்டமான பொம்மலாட்ட பொம்மைகளின் வீதியுலா நடைபெற உள்ளது. மேலும் இருநாட்டு கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன. வார விடுமுறை நாட்கள் என்பதால் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் பொது மக்கள் இதில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 3-ஆம் நாளான நாளை பழைய துறைமுக வளாகத்தில் இந்திய பிரஞ்ச் உணவு திருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**<u>தேர்வு</u>**

புதிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்பட்ட பின்னர் புதுச்சேரியில் முதல் முறையாக அனைத்து அரசு பள்ளிகளிலும் 10-மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிபிஎஸ்இ பொது தேர்வு இன்று நடைபெற்றது. புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம் உள்ளிட்ட 4 பிராந்தியங்களிலும் இன்று நடைபெற்ற தேர்வினை மாணவ மாணிவகள் ஆர்வமுடன் எழுதினர். இதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் பள்ளிக் கல்வித் துறை சார்பில் செய்யப்பட்டு இருந்தது. சிபிஎஸ்இ பொது தேர்வில் கலந்து கொண்ட மாணவி ஹாசினி தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டுள்ளார்.

***<u>மன் கி பாத்</u>***

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது எண்ணங்களை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சியின் 119-ஆவது பதிப்பு வரும் 23ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, காலை 11 மணிக்கு புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகள், தூர்தர்ஷன் மற்றும் பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும்.

பொதுமக்கள், இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை மை-கவ் அல்லது நமோ செயலி மூலமாகவோ அல்லது 1800 11 78 00 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ வரும் 21ஆம் தேதிக்குள் தெரிவிக்கலாம்.

**_வைத்திலிங்கம்_**

புதுச்சேரி மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் ஏனாம் பிராந்தியத்தில் நடைபெற்ற DISHA கூட்டத்தில் இன்று பங்கேற்றார். இந்தக் கூட்டத்தின் போது ஏனாம் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் ஏனாம் பிராந்திய நிர்வாகி திரு முனுசாமி, தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் அதிகாரி திரு ராமகிருஷ்ணா, மீன்வள உதவி இயக்குநர் திரு கோண்டேயா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டதாக எமது ஏனாம் நிருபர் தெரிவித்துள்ளார்.

**_பிஎஸ்என்எல்_**

2024-25-ஆம் ஆண்டின் 3-ஆம் காலாண்டில் பொது துறை நிறுவனமான பிஎஸ்என்எல் நிறுவனம் 262 கோடி ரூபாய் லாபம் ஈட்டி உள்ளது. அனைவருக்கும் வலுவான, மலிவு மற்றும் எளிதில் அணுக கூடிய தொலை தொடர்பு சேவைகளை பிஎஸ்என்எல் வழங்கி வருவதன் மூலம் இந்த சாதனையை எட்டி உள்ளது குறிப்பிடத் தக்கது. இதுகுறித்து புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல்-தொடர்பு அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கடந்த 17 ஆண்டுகளில் முதல் முறையாக பிஎஸ்என்எல் காலாண்டு அடிப்படையில் லாபம் ஈட்டி உள்ளது பாராட்டுக்குரியது என்றும் இந்தியாவின் டிஜிட்டல் எதிர்காலத்திற்கான பாதையாக இது மேலும் மேம்படும் என தெரிவித்தார்.

**_பிரதமர்_**

பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்று வரும் பாரத் டெக்ஸ் 2025-ன் நாளைய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார். மூலப் பொருட்கள் முதல் முடிக்கப்பட்ட பொருட்கள் வரை முழு ஜவுளி சங்கிலியையும் ஒரே கொடையின் கீழ் ஒருங்கிணைக்கும்

வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாரத் டெக்ஸ் 2025-ல் பிரதமர் கலந்து கொள்ள இருப்பது சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. 120-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சர்வதேச பார்வையாளர்கள் மற்றும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் சர்வதேச ஜவுளித் துறை நிறுவனங்களைச் சேர்ந்த தலைமை நிர்வாக அதிகாரிகள், சந்தையாளர்கள், உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்